வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம்

वी.ओ. चिदम्बरनार पत्तन प्राधिकरण

V.O.Chidambaranar Port Authority

(Ministry of Ports,Shipping & Waterways, Government of India)

Administrative Office, Harbour Estate, Tuticorin -628 004

Tamilnadu



SAGARMALA

PORT-LED PROSPERITY

Certificate under :

IMS - ISO 9001:2015; ISO 14001:2015 & ISO 45001:2018 and ISPS compliant Port

Global Connect



Fax : 91-461-2352232

Email id : provocport@gmail.com

Website : www.vocport.gov.in


**Press Release No:13** **Date: 26.01.2024**

**75th Republic Day celebrations in V.O.Chidambaranar Port Authority**

The 75th Republic Day has been celebrated by V.O.Chidambaranar Port in a grand manner at Port's School ground on 26.01.2024.Shri V. Suresh Babu, Chief Mechanical Engineer, unfurled the National flag and took salute from the contingent of CISF, Port Fire Service and Port School's NCC cadets.

In his Republic Day message, Shri V. Suresh Babu, Chief Mechanical Engineer, V.O.Chidambaranar Port Authority, stated that the 'Constitution of India' is infused with Fundamental Rights and the framework for the Government to function in a transparent & accountable manner.

He also stated that many global majors in Green Hydrogen and Green Ammonia have evinced interest to set up manufacturing units in the Port lands. In the capacity augmentation front, the Development of Outer Harbour with two terminals of 1000 m quay length each, at a cost of Rs.7055.95 Crores, is under active consideration of Ministry of Ports, Shipping and Waterways. He further stated that VOC Port has been identified as the Nodal Port for developing off-shore wind farms in the southern Tamilnadu from Kanniyakumari to Ramnad region and to support the initiative, the Port has proposed to develop the required berths and other infrastructure support.

He also expressed gratitude for the unwavering support, cooperation, and dedicated services of all the employees, Officers, Trade unions and Stakeholders for the recent growth achieved by the Port.

As the part of the celebration, Shri V. Suresh Babu, Chief Mechanical Engineer, distributed the appreciation Awards to medal winners of the All India Major Ports Tournaments and the Port users for their timely assistance in distribution of relief materials to the flood affected people of southern districts of Tamilnadu.

To commemorate this historic day, Port's school students performed cultural extravaganza showcasing the spirit of unity and diversity that defines our great nation. The CISF Contingent of the Port demonstrated reflex shooting and field formations.

The above details were released in the Press Release by V. O. Chidambaranar Port Authority, today.

Public Relations Officer

வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம்
वी.ओ. चिदम्बरनार पत्तन प्राधिकरण
V.O.Chidambaranar Port Authority
(Ministry of Ports,Shipping & Waterways, Government of India)
Administrative Office, Harbour Estate, Tuticorin -628 004
Tamilnadu

SAGARMALA
PORT-LED PROSPERITY
Certificate under :
IMS - ISO 9001:2015; ISO 14001:2015 &
ISO 45001:2018 and ISPS compliant Port

Global Connect
Fax : 91-461-2352232
Email id : provocport@gmail.com
Website : www.vocport.gov.in

மக்கள் தொடர்பு அலுவலகம்

பத்திரிக்கைச் செய்தி எண் :13 தேதி :26-01-2024

**வ.உ. சிதம்பரனார் துறைமுக ஆணையத்தில் 75வது குடியரசு தின விழா கொண்டாட்டங்கள்.**

இந்திய திருநாட்டின் 75-வது குடியரசு தின விழா, வ.உ. சிதம்பரனார் துறைமுக ஆணையத்தில் சிறப்பான முறையில் 26.01.2024 இன்று கொண்டாடப்பட்டது. 75வது குடியரசு தின விழாவை முன்னிட்டு திரு வி. சுரேஷ் பாபு, தலைமை இயந்திர பொறியாளர் அவர்கள், தேசியக் கொடியை ஏற்றி வைத்து, மத்திய தொழில் பாதுகாப்புப் படை (CISF), துறைமுக தீயணைப்புப் படை, துறைமுக பள்ளி மாணவ, மாணவியர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

குடியரசு தின விழாவின் சிறப்புரையில், வ.உ. சிதம்பரனார் துறைமுக ஆணையத் தலைமை இயந்திர பொறியாளர் திரு வி. சுரேஷ் பாபு, அவர்கள் இந்திய அரசியலமைப்பானது ஜனநாயகம், நீதி, சுகந்திரம் மற்றும் சமத்துவத்திற்கான சான்றாகும். இது அனைத்து குடிமக்களுக்கான சில அடிப்படை உரிமைகளை உத்தரவாதப்படுத்தியதுடன், அரசு வெளிப்படையாக மற்றும் பொறுப்பான முறையில் செயல்படுவதற்கான கட்டமைப்புகளையும் வழங்குகிறது என்று கூறினார்.

மேலும் அவர், தனது உரையில், வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் பசுமை ஹைட்ரஜன் மற்றும் பசுமை அம்மோனியா உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் அமைப்பதற்கு பல்வேறு நிறுவனங்கள் ஆர்வம் காட்டி வருவதாக தெரிவித்தார். வ.உ.சிதம்பரனார் துறைமுகம் ரூபாய் 7055.95 கோடி செலவில் வெளிதுறைமுகம் அமைக்கும் திட்டத்தில் 1000 மீட்டர் நீளத்துடன் கூடிய இரண்டு சரக்குபெட்டக முனையங்களை அமைப்பதற்கு மத்திய கப்பல், துறைமுகங்கள் மற்றும் நீர்வழி போக்குவரத்து அமைச்சத்தின் பரிசீலனைக்கு **அனுப்பியுள்ளது** குறிப்பிட்டத்தக்கது. மேலும் தென்தமிழகமான கன்னியாகுமரி மாவட்டம் முதல் இராமநாதபுரம் மாவட்டம் வரையிலான கடல் பகுதிகளில் காற்றாலை மின்நிலையங்கள் அமைபெற உள்ளன. இவ்வாறு அமைய பெறும் காற்றாலை நிலையங்களுக்கு தேவைப்படும் காற்றாலை இயந்திரங்கள் மற்றும் இறகுகளை கையாளுவதற்கு தேவையான அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளை வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் மேற்கொள்ளும் என்று கூறினார்.

துறைமுக ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளின் சிறப்பான பணி, தொழிற்சங்களின் ஒத்துழைப்பு மற்றும் துறைமுக உபயோகிப்பாளர்களின் சீரிய செயல்பாட்டிற்கு நன்றி தெரிவித்ததுடன், வ.உ.சிதம்பரனார் துறைமுகம் வரும் காலங்களில் சிறப்பாக செயல்பட வேண்டும் என்று கேட்டு கொண்டார்.

திரு வி. சுரேஷ்; பாபு, வ.உ. சிதம்பரனார் துறைமுக ஆணையத் தலைமை இயந்திர பொறியாளர், அவர்கள் தென்தமிழகத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெள்ள நிவாரண பொருட்களை உரிய நேரத்தில் விநியோகம் செய்வதற்கு சிறப்பாக உதவிய துறைமுக உபயோகிப்பாளர்களுக்கு விருதுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார். மேலும் அகில இந்திய பெருந் துறைமுகங்களுக்கிடையே நடைபெற்ற விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார்கள்.

இவ்விழாவின் இறுதியாக துறைமுக பள்ளிகளின் நடன நிகழ்ச்சிகள் மற்றும் மத்திய தொழில் பாதுகாப்பு படையினரின் பல்வேறு பாதுகாப்பு செயல்முறை விளக்கங்களை செய்து காட்டினார்கள்.

மேற்சொன்ன தகவலை வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் இன்று வெளியிட்டுள்ள பத்திரிக்கை செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

மக்கள் தொடர்பு அதிகாரி